## வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூலை - 2017
## Term Examination, July- 2017

| தரம் :- 12 (2018) | கிறிஸ்தவ நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1. 1) 5 | 2) 3 | 3) 1 | 4) 2 |
| 5) 3 | 6) 4 | 7) 1 | 8) 3 |
| 9) 5 | 10) 3 | 11) 1 | 12) 4 |
| 13) 4 | 14) 5 | 15) 2 | 16) 3 |
| 17) 1 | 18) 5 | 19) 5 | 20) 2 |

### பகுதி – II

### பகுதி – அ

01.

1. புனித அகுஸ்தீனார் :-
   - இலண்டனிலும், இராச் செஸ்ரரிலும் மறை மாவட்டங்களை அமைத்தார்.
   - கண்டர்பரியில் புனித இராயப்பர், சின்னப்பர் துறவிகள் மடத்தைக் கட்டினார்.

   புனித கொலம்பா :-
   - ஸ்கொட்லாந்தின் அப்போஸ்தலர்
   - பல துறவிகள் இல்லங்களை அமைத்தார்.
   - அயனா தீவில் மறைத் தொண்டாற்றினார்.
   - பிக்கு இனத்தை மனந்திரும்பினார்.

2. நற்செய்தியை கேள்விப்பட்டிராத புறவினத்தவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்க அனுப்பப்பட்டார். பர்னபா, யோவான் மாற்கு

3. திசேயா பொதுச்சங்கம் :-
   - கிறிஸ்து பிதாவிற்கு சரியொத்தவர்
   - பிதாவோடு ஒரே பொருளானவர்
   - அவர் மெய்யான கடவுள்

   எபேசு பொதுச்சங்கம் :-
   - கிறிஸ்துவில் ஒரே ஆண்டவரில் இரு இயல்புகள் ஒன்றித்திருக்கின்றன.
   - மரியாள் உண்மையில் இறைவனின் தாய்

   கொன்ஸ்தாந்தி நோபிள் சங்கம் :-
   - நிசேயா விசுவாச அறிக்கையில் தூய ஆவியின் தெய்வீகத்தைப் பற்றிய வார்த்தைகளைச் சேர்த்தனர்.
   - பிதாவினின்றும், சுதனினின்றும் புறப்படும் ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான தூய ஆவியையும் விசுவசிக்கின்றேன்.
   - இவர் பிதாவோடும், சுதனோடும் ஒன்றாக ஆராதனையும், மகிமையும் பெறுகிறார்.

The National e-learning Portal for the General Education

கல்செடோன் பொதுச்சங்கம் :-

- இயேசு இறைத்தன்மையும், மனிதத்தன்மையும் கொண்டவர்.
- இவ்விரு இயல்புகளும் இரண்டரக் கலக்காமல், மாறுபடாமல் முழுவதும் அவரில் இணைந்திருந்தன.
- இவ்விரு இயல்புகளையும் தன்னகத்தே கொண்ட கிறிஸ்து ஆள் வகையில் ஒருவரே.

4.

- கிறிஸ்தவர்களின் விசுவாசம் உறுதிப்படுத்தப்பட்டது.
- கிறிஸ்தவர்கள் மத்தியில் தாராள குணமும், தியாக வாழ்க்கையும் வளர்த்தன.
- அவர்கள் தம் தியாகம், பொறுமை, மனச்சாட்சி மரணம் வழியாக தம் விசுவாசத்திற்கு அளித்த சாட்சியம் மறை உண்மைகளின் உன்னதத்தையும், வலிமையையும் எடுத்துக்காட்டின.
- கலாபனைக்காரர் முன் அவர்கள் காட்டிய தைரியம் கலாபனைக் காரரையே சிந்திக்க வைத்தன. அவர்கள் திருச்சபையைத் தழுவினர்.
- மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் விந்தாக மாறியது.

5.

- ஞாயிறு தினத்தில் ஊதியம் பெறும் வேலைகள் செய்யலாகாது.
- சிலுவையில் அறைந்த குற்றவாளிகள் கொல்லப்படலாகாது.
- அடிமை வியாபாரம், அடிமைகள் கொல்லப்படுதல் தடை செய்யப்பட்டது.
- அங்கவீனமான சிசுக்கொலை தடை செய்யப்பட்டது.

02.

1. தபோதனர், ஏகாந்திகள், துறவுற பொது வாழ்வு, துறவறகுழு வாழ்வு பற்றிய கருத்துக்கள் வழங்கியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

2. தேப்ஸ் சின்னப்பர், எகிப்து அந்தோனியார், புனித பக்கோமியுஸ், புனித அத்தனாசியார், புனித பிலோரியன் போன்றவர்களில் யாரேனும் நால்வரைப் பற்றி எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்.

3. மறைபரப்புப்பணி
   - மிலேச்சரை சீர்திருத்தி நாகரிகப்படுத்தும் பணி
   - பாடசாலைகளை அமைத்து கல்வியறிவு அளிக்கும் பணி
   - கலாசார விவசாய கைத்தொழில் மேம்பாட்டுப் பணி

4. குளுணி, சிஸ்ரேசியன், வல்தேசியன், பிரான்சிஸ்கள் துறவற சபைகள்

   துறவிகளின் வாழ்வு கிறிஸ்தவ உத்தம தனத்தை விட்டு விலகி பணம், பதவி, இலௌகீக வாழ்க்கை, பட்டங்களுக்கும், செல்வாக்குகளுக்கும் அடிமைப்பட்டமையினால் இந்நிலையை நீக்க இரவலர் சபைகள் தோற்றம் பெற்றன.

5. சமயப்பின்னணி, சமூகப்பின்னணி, அரசியல் பின்னணி, பொருளாதாரப் பின்னணி விளக்கியிருப்பின் புள்ளி வழங்கவும்.

03.

1. குளோவிஸ் அலமான் இனத்தவர்களைத் தோற்கடிப்பதற்கு கிறீஸ்தவர்களின் தெய்வத்தின் உதவியை நாடி வெற்றியீட்டியமையால் அவனும், அவருடன் 3000 பேரும் திருமுழுக்கு பெற்ற சம்பவங்கள் விளக்கி இருப்பின் புள்ளி வழங்கலாம்.
   - 5ம் நூற்றாண்டில் முழுக்கத்தோலிக்க தேசமாக இருந்த ஒரே நாடு பிரான்ஸ் தான்

2. அருட்சாதனங்களின் செயற்பாடுகள், அருட்கொடைகள் அதை அளிக்கும் குருக்களின், ஆயர்களின் ஆன்மீக நிலையில் தங்கியுள்ளன.
   - நிறைவேற்றும் குருக்கள் விசுவாசமுடையவராக இல்லாவிடின் அவர்கள் அளிக்கும் அருட்சாதனங்கள் பயனற்றவை.
   - பாவிகளுக்கு திருச்சபையில் இடமில்லை.

3. 2ம் சிலுவைப் போர் :-
   - 1147 – 1187 காலப்பகுதியில் நடைபெற்றது.
   - திருத்தந்தை 3ம் இயூஜின் திருத்தலத்தை மீட்க வேண்டுகோள் விடுத்தமை.
   - பேரரசர் 3ம் கோன்ராட், 7ம் லூயிஸ் என்பவர்கள் 50,000 வீரர்களுடன் முற்றுகையிட்டனர்.

   3ம் சிலுவைப்போர் :-
   - 8வது கிரகோரியார் சிலுவைப் போருக்கு அறைகூவல் விடுத்தமை
   - இப்போரில் பேரரசர் பிரெட்றிக் பார்பரோசா, பிரான்ஸ் மன்னன் 2வது பிலிப்பு, இங்கிலாந்து மன்னன் 1வது றிச்சட் என்பவர்கள் கலந்து கொண்டனர்.

4. யூதர்களின் மெசியா பற்றிய எதிர்பார்ப்பு வேறாக அமைந்தமை
   - கிறிஸ்தவர்கள் அந்த மெசியாவை ஆண்டவராக ஏற்றமை
   - கிறிஸ்தவர்கள் இயேசுவின் கொலைப் பழியை யூதர்கள் மேல் சுமத்தியமை
   - பரிசேயர், சதுசேயர் முதலியோர் தங்கள் பதவிகள் பறிபோய்விடும் என்று அஞ்சியமை. (போன்ற கருத்துக்கள்)

5. நீரோ மன்னன் காலத்து கலாபனை காலப்பகுதி – கி.பி 64 – 65 கொள்கைக் கலாபனை எனவும் அழைப்பர் வேதசாட்சிகள் புனித பேதுரு, புனித பவுல் போன்ற கருத்துக்கள் இருப்பின் புள்ளி வழங்கவும்.

04.

1. ஜெனிவாவில் பல்கலைக்கழகம் அமைத்தமை.
   - கிரேக்க, எபிரேய மொழிகள், தத்துவக்கலை, மெய்யியல் போன்றன போதித்தல்.
   - சட்டம், நிர்வாகம் சார்பாக அறிவுரை கொடுத்தல்.
   - மறைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பித்தார்.

   போன்ற கருத்துக்கள்

2. சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்
   - சிறைச்சாலைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.
   - சிறுவர்களை கிறிஸ்தவ நெறியில் வளர்த்தல்
   - எதிர்ப்புக்கள் மத்தியில் ஓய்வுராட் பாடசாலையை உருவாக்கல்
   - பல மிசனரி சங்கங்களை உருவாக்கல்

   போன்றன

3. இக்னேசியஸ் லொயலா இஸ்பானிய இனத்தவர்
   - மாட்டின் லூதரினால் ஏற்படுத்தப்பட்ட சீர்குலைவுகள் பரவுவதைத் தடுத்தார்.
   - கத்தோலிக்க திருச்சபையை சீர்திருத்தவும் பிரிந்து சென்ற கத்தோலிக்க பிரதேசங்களை திருச்சபையின் கீழ் மீண்டும் ஒன்றுபடுத்த அயராது முயற்சி செய்தார்.
   - 1540 ல் இயேசு சபையை ஸ்தாபித்தார்.
   - அச்சபையைச் சேர்ந்த குருக்கள் திருச்சபையின் சீர்திருத்தத்திற்கு முழு மூச்சாக ஒத்துழைப்பு வழங்கினர்.

4. கார்மேல் சபையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களையும் அவருடன் சிலுவை யோவான் சீர்திருத்தத்தில் பங்காற்றிய விதம் பற்றியும் விளக்கி இருப்பின் புள்ளி வழங்கவும்.

05.

1. கொஸ்மஸ் இன்டிகோ பிகாஸ்தர் எழுதிய கிறிஸ்தவ சபைகளின்
   - தொரோதியஸ், குடோ, மாபி, சொவ்ரோனியஸ் போன்ற எழுத்தாளர்களின் கூற்றுக்கள்.
   - பாரசீக வியாபாரிகள் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர் என்பதனை வெளிப்படுத்தும் யூதக்கிறிஸ்தவர்கள் இவ்வறாப், அபுசாயிப், பெஞ்சமின் இராபாய் போன்னோரின் கூற்றுக்கள்.
   - அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட றொஸ்தோரிய சிலுவை போன்றன
   - மகாவம்சவில் உள்ள சில சுட்டிக்காட்டல்கள்.

2. ஆலயங்கள் தகர்க்கப்பட்டமை

- கத்தோலிக்க மதம் தடை செய்யப்படல்
- குருக்கள் நாடு கடத்தப்படல்
- குருக்களுக்கு உதவுபவர்களுக்கு மரணதண்டனை
- பாடசாலைகளில் புரட்டஸ்தாந்து மதம் கற்பிக்கப்பட்டமை.

3. யோகவாய் அடிகளாரின் ஆரம்ப வாழ்வு

- இலங்கை வருகை – 1687
- யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி உள்ளிட்ட இடங்களில் மறைபணி
- பிறப்பு – 1651 சித்திரை 21 கோவாநகர்
- 1676 ல் குருவாக திருநிலைப்படுத்தப்படல்
- நாடு முழுவதும் மறைதூதுப்பணியில் ஈடுபடுதல்
- பிச்சைக்கார வேடம் பூண்டு இலங்கைக்கு வருகை தரல்.
- கண்டியில் வைசூரி நோய் பரவ அவர்களிடையே பணிபுரிதல் போன்றன.

4. தமிழிலும், சிங்களத்திலும் நூல்கள் எழுதியமை

- முதலில் யோசவாஸ் அடிகளாரால் தமிழில் எழுதப்பட்ட செபங்கள், சிலுவைப்பாதை, பிரார்த்தனைகள், செபமாலை காரணிக்கங்கள் என்பனவற்றை நல்ல தமிழில் எழுதி சிங்களத்தில் மொழி பெயர்த்தார்.
- வேத அருள், வேத புராணம், நற்செய்தி விரிந்துரை, சத்திய வேதாகம சங்சேபம் போன்ற நூல்களை சிங்களத்திலும், தமிழிலும் எழுதினார்.
- இயேசுவின் பாடுகள் பற்றிய நாடகங்களையும் எழுதினார்.
- வியாகுல பிரசங்கம் (பசான்) என்ற புத்தகத்தை இரு மொழிகளில் எழுதினார்.

06.

1. திருத்தூதர் தோமா கி.பி 52ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து நற்செய்தியை அறிவித்து மக்களுக்கு திருமுழுக்குக் கொடுத்து அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கினார். கேரளத்தில் ஏழு கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கினார்.

2. தேசிய பண்பாட்டை மதித்தல்

- கலையிலும், விஞ்ஞானத்திலும் தேர்ச்சி பெற்ற உதவியாளர் ஒருவரைத் தம் சபைக்கு அழைத்துக் கொண்டமை.
- சீன அறிஞர்களின் ஆடை அணிந்து சீனப் பழக்கவழக்கங்களை பின்பற்றியமை.
- வான சாஸ்திரம் தொடர்பான உரைகளை நிகழ்த்தியமை. இயேசு சபையின் அங்கத்தவர் பழைமை சீன கலாசாரத்தை மதித்து அதில் சில முறைகளை தங்களுடைய சமய ஒழுங்கு முறைகளுடன் சேர்த்துக் கொண்டனர்.

3. போத்துக்கேயர் இந்தியாவிற்கு வந்த காலத்தில் சீரிய கிறிஸ்தவர்களில் பிளவுகள் ஏற்பட்டு ஒரு சிலர் திருத்தந்தையின் வழிகாட்டலையும், இலத்தீன் முறைமைகளையும் ஏற்றுக் கொண்டனர். இன்னும் சிலர் திருத்தந்தையின் வழிகாட்டலின் கீழ் வாழ்ந்து கீழைத்தேய மரபுகளை ஏற்றுக் கொண்டவர்கள் சீரோ மலபார் திருச்சபையினர் ஆவர்.

திருத்தந்தையின் வழிகாட்டலை ஏற்று மேற்கு சீரிய மரபுமுறைகளை தமது வழிபாடுகளில் பின்பற்றியவர்கள் சீரோ மலங்கார திருச்சபையினர் ஆவர்.

4. திருப்பலிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை.
- வழிபாடுகள், பக்தி மார்க்கங்களிற்கும் கொண்டாட்டங்களிற்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
- புனிதர்களின் வணக்கம் சிறப்பிடம் பெற்றது.
- திருயாத்திரைகளுக்கு சிறப்பு அளிக்கப்பட்டமை

  **Eg :-** அன்னை வேளாங்கன்னி திருத்தலம்
- வழிபாட்டு மையம்

07.

1. பிரான்ஸ் நாட்டில் லயன்ஸ் நகரில் வாழ்ந்த ஒரு பெரிய வியாபாரி அநியாய வட்டிக்கு பணம் கொடுத்து சம்பாதித்தார். புதிய ஏற்பாட்டைப் படித்து மனமாற்றம் பெற்றார். அனைத்தையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்தார். 1176ம் ஆண்டு பணியை வெளிப்படையாக ஆரம்பித்தார். இவர் தன் சீடர்களை இருவர் இருவராக பணி செய்ய அனுப்பினார். இவர்கள் ஏழ்மையான உடை அணிந்து, மரத்தால் செய்யப்பட்ட செருப்பு அணிவர்.

   இவர் ஸ்தாபித்த சபை வல்தேசியன் சபையாகும். இச்சபையின் பணிகள் குறிப்பிட்டிருப்பின் புள்ளி வழங்கவும்.

2. பிரான்சிஸ் சவேரியாரின் மனமாற்றம்
- 1209ல் வார்த்தைப்பாடுகளை மேற்கொண்டு சபையின் ஒழுங்கு விதிகளை முன்வைத்தல்.
- 1210ல் சபையை வாய்மொழியாக அனுப்புதல். திருத்தந்தை 3ம் இனசென்ட் கொடுத்தல்.
- 1223ல் அங்கிகாரம் பெறல்.

  போன்றன விளக்கப்படல்.

3. வளர்ந்தோர் திருமுழுக்கை ஏற்றுக் கொண்டாலும் நீரால் பெறப்படும். திருமுழுக்கை விட ஆவியால் பெறப்படும் திருமுழுக்கே மேன்மையானது எனப் போதித்தார்.
- இறைவாக்கு உயிருள்ளது என நம்பினார். இறைவெளிப்பாடு தொடர்ந்து நடைபெறுகிறது எனவும் நம்பினார்.
- நற்கருணை விருந்து இயேசுவின் தியாகப் பலியின் ஓர் அடையாளம் மட்டுமே என்றார்.
- மரியாவின் பாடலில் வரும் தமிழ் நிலையைக் கண்ணோக்கினார், எனும் வார்த்தைகளைப் பயன்படுத்தி பெண்ணியல் விடுதலைக்காக குரல் கொடுத்தார்.
- எல்லாம் பொதுவானவை என போர்க்குரல் எழுப்பினார்

4. இக்கோனியாவில் யூதர்கள் கலகம் ஏற்படுத்தியமை.
- பிலிப்பியில் சிறைப்படல்
- எதென்சில் மக்கள் ஏளனம் செய்தல்
- தெசலோனிக்காவில் கலகம்
- எபேசில் திமோத்தேயு என்ற பொற்கொல்லனின் கலகம்
- மால்த்தா தீவில் பாம்பு தீண்டுதல்.